



## பாசிச பா.ஜ.க.-வையும், அடிமை அ.தி.மு.க.-வையும் மக்கள் நிராகரிப்பார்கள்:

# கழகத் தலைவர் மீண்டும் முதலமைச்சர் நாற்காலியில் அமர, கழக உடன்பிறப்புகள் சுற்றிச்சுழன்று களப்பணியாற்ற வேண்டும்!

## சென்னை வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் மத்தியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிகு உரை!

சென்னை, ஜன.12 –

**சென்னை வடக்கு மாவட்டக் கழகம் சார்பில், பெரம்பூரில் நடைபெற்ற பொங்கல் விழாவில், பெரம்பூர் – இராயபுரம் – ஆர்.கே. நகர் தொகுதிகளைச் சேர்ந்த 5,000 கழக நிர்வாகிகளுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பொங்கல் நலத்திட்ட உதவிகளை வழங்கி, எழுச்சிமிக்க உரையாற்றினார்.**

**அப்போது அவர், "கழகத் தலைவர் அவர்கள் மீண்டும் முதலமைச்சர் நாற்காலியில் அமர, கழக உடன்பிறப்புகளாகிய நீங்கள் சுற்றிச்சுழன்று களப்பணியாற்ற வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய எழுச்சிமிக்க உரை வருமாறு:

இன்று சென்னை வடக்கு மாவட்டக் கழகம் சார்பாக நடைபெறுகின்ற இந்தப் பொங்கல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். முதலில் வந்திருக்கின்ற அனைவருக்கும் என் ஆங்கில புத்தாண்டு நல்வாழ்த்துகளையும் பொங்கல் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### பொங்கல் திருநாள்

தமிழர்களின் பண்பாட்டிற்கு எடுத்துக்காட்டான விழா என்றால், அது நம்முடைய பொங்கல் திருநாள்தான். இன்று தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒவ்வொரு வீட்டிலும் கொண்டாடப்படுகின்ற, கொண்டாடப்பட வேண்டிய விழா என்றால், அது நம்முடைய பொங்கல் திருநாள் விழாதான். ஏனென்றால் மதங்களைக் கடந்து, சாதிகளையெல்லாம் கடந்து, எல்லாத் தரப்பு மக்களும் கொண்டாட வேண்டிய ஒரு விழா நம் பொங்கல் திருநாள் விழா. உழைப்பிற்கு அங்கீகாரம் கொடுக்கின்ற விழா, இயற்கைக்கு நன்றி சொல்கின்ற விழா நம் பொங்கல் விழா.

அதனால்தான் பொங்கல் திருநாளை, தமிழ்நாடு முழுவதும் `திராவிடப் பொங்கலாக' கொண்டாட வேண்டுமென்று நம்முடைய தலைவர் அவர்கள் நமக்கு அறிவுறுத்தியிருக்கின்றார்கள்.

அந்த அடிப்படையில், இன்று இந்த சென்னை வடக்கு மாவட்டத்தில் நம்முடைய மாவட்டக் கழகப் பொறுப்பாளர், சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்கள் மிகச் சிறப்பாக இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ததற்காகவும், அதில் என்னை அழைத்ததற்காகவும் இந்த நேரத்தில் என் நன்றியையும் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் உங்கள் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### இளைஞர் அணியில் பயிற்சி

அண்ணன் ஆர்.டி.சேகர் அவர்கள் எந்த நிகழ்ச்சி நடத்தினாலும், மிகச் சிறப்பாக நடத்தக்கூடியவர், ஆற்றல் வாய்ந்தவர். இதில் எனக்கு என்ன கூடுதல் பெருமை என்னவென்றால், அவர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆவதற்கு முன்னால் எங்களின் இளைஞர் அணியில் பயிற்சி பெற்றவர். அதில் இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டுமென்றால், நான் 2019-இல் முதன்முதலாகக் கழகத்தில் பொறுப்பு பெற்று இளைஞர் அணிச்செயலாளராகத் தலைவர் அவர்களால் நியமிக்கப்பட்ட போது, அண்ணன் ஆர்.டி. சேகர் அவர்கள் மாநிலத் துணைச் செயலாளராக இருந்து என்னை வழிநடத்தியவர். அண்ணன் ஆர்.டி. சேகர் அவர்களுக்கு இந்த நேரத்தில் என் பாராட்டுகள், வாழ்த்துகள் மற்றும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரங்கத்தை, விளையாட்டுத் திடலைப் பார்க்கும்போது எனக்கு இன்னும் சில கூடுதல் நினைவுகள் வருகின்றன. நான் எழும்பூரில் இருக்கின்ற டான் போஸ்கோ பள்ளியில்தான் படித்தேன். அங்கு படித்திருந்தாலும், அடிக்கடி பெரம்பூரில் இருக்கின்ற டான் போஸ்கோ பள்ளிக்கு என்னை அழைத்து வருவார்கள். இதே விளையாட்டுத் திடலில் பலமுறை என் நண்பர்களோடு சேர்ந்து பள்ளிப் பருவத்தில் விளையாடியிருக்கிறேன். அந்தத் திடலில் உங்களையெல்லாம் இந்தப் பொங்கல் நிகழ்ச்சியை ஒட்டி சந்திப்பதில் உண்மையிலேயே மிகுந்த பெருமை அடைகிறேன்.

### உங்களுடைய வீட்டுப் பிள்ளை

என்னதான் இன்று இளைஞர் அணிச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர், தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் என இத்தனை பொறுப்புகள் வந்தாலும் அதெல்லாம் என்றுமே நிலையானது கிடையாது. எது என்றுமே நிலையானது என்றால், இங்கே வந்திருக்கின்ற உங்களுடைய வீட்டுப் பிள்ளையாக, பொறுப்பான செல்லப் பிள்ளையாக நான் இருப்பதே ஆகும். அந்த உரிமையோடு என்னுடைய உறவினர்களோடு சேர்ந்து, என் குடும்பத்தோடு சேர்ந்து இன்று பொங்கல் விழாவை உங்களோடு கொண்டாடி, அந்த மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வதற்காக வந்திருக்கிறேன்.

இன்று பொங்கலை ஒட்டுமொத்தத் தமிழ்நாடும் சிறப்பாகக் கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம். பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, இன்று திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக, இந்த மாவட்டத்தில் மட்டுமல்ல, நேற்று சென்னை கிழக்கு மாவட்டத்திலும் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தினோம். இதை முடித்துவிட்டு என் தொகுதியான சேப்பாக்கம்-திருவல்லிக்கேணியில் நடைபெறும் பொங்கல் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளப் போகிறேன். சென்னை வடக்கு மாவட்டம் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் அனைத்து இடங்களிலும், அனைத்து மாவட்டங்களிலும் இன்று பொங்கலை மிகச் சிறப்பாக நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

### மீண்டும் 'லேப்டாப்' திட்டம்

திராவிட முன்னேற்றக் கழகம் ஒருபக்கம் கொண்டாடிக் கொண்டு இருந்தாலும், இன்று தமிழ்நாடு அரசின் சார்பாகவும் பொங்கல் நிகழ்ச்சி ஒவ்வொரு இடத்திலும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், நம் முதலமைச்சர் அவர்கள் மூன்று நாட்களுக்கு முன்பு தமிழ்நாட்டில் படிக்கின்ற அனைத்து இறுதி ஆண்டு கல்லூரி மாணவர்களுக்கும் மீண்டும் 'லேப்டாப்' திட்டத்தை அறிமுகப்படுத்தி, இன்று மாணவர்கள் கையில் மடிக் கணினிகளை வழங்கியிருக்கிறார். 2019-இல் அ.தி.மு.க ஆட்சியில் நிறுத்தப்பட்ட இந்த மடிக்கணினித் திட்டத்தை இன்று நம்முடைய தலைவர் அவர்கள் மீண்டும் தொடங்கி வைத்திருக்கிறார்.

### பொங்கல் பரிசாக ரூ.3,000

மாணவர்கள், குறிப்பாக மகளிர், கைகளில் கரண்டியைப் பிடித்துக் கொண்டிருக்காமல் எல்லோரும் படிக்க வேண்டும், புத்தகத்தைக் கையிலெடுக்க வேண்டும் என்று தந்தை பெரியார் சொன்னார். நம்முடைய தலைவர், புத்தகத்தை மட்டுமல்ல, அவர்கள் இன்னும் சிறப்பாகப் படிப்பதற்கு மடிக்கணினியையும் சேர்த்து வழங்கியிருக்கிறார். அதுமட்டுமல்ல, இன்னொரு மகிழ்ச்சியான செய்தியை, தலைவர் அவர்கள் மூன்று நாட்களுக்கு முன்பு அறிவித்தார். நேற்று காலையிலிருந்து அனைவருக்கும் வழங்கத் தொடங்கிவிட்டோம். பொங்கலை முன்னிட்டுத் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் 3,000 ரூபாய் ரொக்கத் தொகையும், பொங்கல் சிறப்புப் பரிசாக வேட்டி, சேலை, சர்க்கரை, அரிசி, கரும்பு என அனைத்தையும் வழங்கிக்கொண்டிருக்கிறோம்.



### விடியல் பயணத் திட்டம்

ஆட்சி அமைத்தது முதல் ஒவ்வொரு நாளும் நம்முடைய தலைவர் அவர்கள் ஒவ்வொரு திட்டத்தையும் பார்த்துப் பார்த்து இந்த நான்கரை ஆண்டுகளில் சிறப்பாகச் செய்திருக்கிறார். ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் முதலமைச்சராக அவர் போட்ட முதல் கையெழுத்து, 'மகளிருக்கு விடியல் பயணத் திட்டம்' எனும் கட்டணமில்லாப் பேருந்து திட்டம். இந்த விடியல் பயணத் திட்டத்தின் மூலமாக மகளிர் ஒவ்வொருவரும் மாதம் 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாய் வரை சேமிக்கிறார்கள். இன்று மற்ற மாநிலங்கள் நம் மாநிலத்தைப் பார்த்து இந்த விடியல் பயணத் திட்டத்தைத் தங்களது மாநிலங்களிலும் அறிமுகப்படுத்தியிருக்கின்றன.

10 லட்சம் மாணவ மாணவியர்களுக்கு இலவச மடிக்கணினித் திட்டம், விடியல் பயணத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், முதலமைச்சர் காலை உணவுத் திட்டம், 'தமிழ்ப் புதல்வன்' திட்டம் எனப் பல்வேறு திட்டங்களை நம் முதலமைச்சர் செயல்படுத்தி வருகிறார். தமிழ்நாடு முழுவதும் உள்ள ஒரு கோடியே 30 லட்சம் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் வழங்கும் 'மகளிர் உரிமைத் தொகை' திட்டத்தையும் நம் முதலமைச்சர் வழங்கிக்கொண்டிருக்கிறார்.

### ரூ.8,000 கோடி மதிப்பிலான பணிகள்

இதுமட்டுமில்லாமல், இன்று வடசென்னை பகுதியில் மட்டும் `வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்' கீழ் 8,000 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. பெரம்பூர் தொகுதியில் 126 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கணேசபுரம் மேம்பாலம், கொடுங்கையூர் குப்பைமேடு சீரமைக்க 630 கோடி ரூபாய் மதிப்பீட்டில் `பயோ-மைனிங்' பணிகள், மூன்று முக்கியக் கால்வாய்களுக்கு 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தடுப்புச் சுவர்கள், 23 கிலோமீட்டர் தொலைவிற்குத் தொகுதி முழுவதும் கழிவுநீர் கால்வாய் வசதி, முல்லை நகர் மற்றும் கண்ணதாசன் நகர் பகுதியில் 5 கோடி ரூபாய் செலவில் பேருந்து நிலையங்கள், மகாகவி பாரதியார் நகரில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சமூக நலக்கூடம் எனப் பல பணிகள் நடைபெறுகின்றன. இவை தவிர 5,000 பேருக்குப் பட்டாக்களை வழங்கியிருக்கிறோம்.

ஆர்.கே. நகரிலும் பல்வேறு திட்டங்கள் இந்த நான்கு ஆண்டுகளில் நடைபெற்றிருக்கின்றன. எழில் நகரில் 110 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்பாலம், 20 கோடி ரூபாயில் 13 எம்.எல்.டி கொள்ளளவு கொண்ட நீரேற்று நிலையம், சுண்ணாம்புக் கால்வாயில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய விளையாட்டு வளாகம், சுமார் 23 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தண்டையார் பேட்டையில் நவீன வசதிகளுடன் புதிய பேருந்து நிலையம், ஏ.இ. கோயில் பகுதியில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய விளையாட்டு வளாகம் எனப் பல திட்டங்களைச் செயல்படுத்தியிருக்கிறோம்.

ராயபுரம் தொகுதியிலும் செட்டித் தோட்டம் பகுதியில் 45 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், கிழக்கு கல்லறைச் சாலை பகுதியில் 240 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் புதிய வீடுகள் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பாகக் கட்டப்பட்டுள்ளன. ஆர்.எஸ்.ஆர்.எம். மருத்துவமனையில் 93 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் கூடுதல் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. 31 கோடி ரூபாய் மதிப்பீட்டில் போஜராஜபுரம் சுரங்கப்பாதை கட்டப்பட்டு வருகிறது.

இவ்வாறு வடசென்னை மாவட்டத்தில் ஏராளமான பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

### ஒன்றிய அரசே வியப்பு

இத்தகைய திட்டங்களைத் தமிழ்நாடு முழுவதும் நிறைவேற்றியதால்தான், இன்று நம் மாநிலம் 11.19 சதவிகித வளர்ச்சியோடு இந்தியாவில் சிறப்பாகச் செயல்படும், அதிக வளர்ச்சி அடையும் மாநிலமாகத் திகழ்கிறது. இந்த வளர்ச்சியைப் பார்த்து, ஒன்றிய பா.ஜ.க அரசுக்கு எரிச்சல் ஏற்படுகிறது. தமிழ்நாட்டுக்குத் தர வேண்டிய நிதியைத்தருவதில்லை; உரிமைகளைத் தொடர்ந்து பறிக்கிறார்கள். இவ்வளவு இடைஞ்சல்களுக்கு மத்தியிலும் தமிழ்நாடு எப்படிச் சாதனைகளைச் செய்கிறது என்று ஒன்றிய அரசே வியக்கிறது.

கல்வி உரிமை, நிதி உரிமை, மொழி உரிமை ஆகிய மூன்றையும் ஒன்றிய பா.ஜ.க அரசு தொடர்ந்து பறித்து வருகிறது. உதாரணமாக, புதிய கல்விக் கொள்கையை மற்ற மாநிலங்கள் ஏற்றபோது, நம் முதலமைச்சர் மட்டும் அதை ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்றார். ஏனெனில், புதிய கல்விக் கொள்கை வழியாக இந்தித் திணிப்பும், சமஸ்கிருத ஊடுருவலும் வர வாய்ப்புள்ளது. நாம் ஒழித்த குலக்கல்வித் திட்டத்தை மீண்டும் கொண்டுவர ஒன்றிய அரசு முயற்சிக்கிறது.

ஒன்றிய கல்வி அமைச்சர் அவர்கள், ``தமிழ்நாடு மட்டும் மறுப்பதால் கல்வி நிதியை வழங்க முடியாது'' என்று கூறினார். ஆனால் நம் முதலமைச்சர், ``நீங்கள் 2,500 கோடி அல்ல, 10,000 கோடி கொடுத்தாலும், புதிய கல்விக் கொள்கையை ஏற்க மாட்டோம்; இந்தித் திணிப்பையும் சமஸ்கிருதத் திணிப்பையும் அனுமதிக்க மாட்டோம்'' என்று கூறி சட்டப் போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்.

### 'தமிழ்ப் புதல்வன்', 'புதுமைப் பெண்'

இன்று இந்தியாவுக்கே எடுத்துக் காட்டாக விளங்கும் நம் காலை உணவுத் திட்டத்தைப் பஞ்சாப் முதலமைச்சர் பாராட்டித் தன் மாநிலத்தில் அறிமுகப்படுத்தப் போவதாகக் கூறியுள்ளார். அதேபோல் 'தமிழ்ப் புதல்வன்', 'புதுமைப் பெண்' திட்டங்களைத் தெலுங்கானா முதலமைச்சர் பாராட்டியுள்ளார். இன்று ஒன்றிய அரசு ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தால், பிற மாநிலங்கள் தமிழ்நாடு அதை ஏற்கிறதா இல்லையா என்பதையே உற்றுப் பார்க்கின்றன. அந்த அளவுக்குப் பாசிச சக்திகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் தலைவராக நம் முதலமைச்சர் திகழ்கிறார்.

தொகுதி மறுவரையறை மூலம் தமிழ்நாட்டின் நாடாளுமன்றத் தொகுதிகளை 39-லிருந்து 32-ஆகக் குறைக்க முயன்றபோது, அதை முதலில் எதிர்த்தவர் நம் தலைவர். அதேபோல் எஸ்.ஐ.ஆர். (SIR) திட்டம் மூலமாகத் தமிழ்நாட்டில் 97 லட்சம் வாக்காளர்களை நீக்கியிருக்கிறார்கள். சிறுபான்மையினர், ஒடுக்கப்பட்டோர் மற்றும் மகளிரின் வாக்குகளை நீக்குவதே இதன் நோக்கம் என்று தலைவர் ஆரம்பத்திலேயே எச்சரித்தார். சென்னையில் மட்டும் 14 லட்சம் வாக்காளர்களும், பெரம்பூரில் 98,000 வாக்காளர்களும் நீக்கப்பட்டுள்ளனர்.

### வாக்காளர் விடுபடக் கூடாது

தகுதியான ஒரு வாக்காளர் கூட விடுபடக் கூடாது என்பது தலைவரின் உத்தரவு. எனவே, உங்கள் பெயர் மற்றும் உங்கள் குடும்பத்தினர், நண்பர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் உள்ளனவா என்று சரிபாருங்கள். விடுபட்ட பெயர்களைச் சேர்க்க வருகிற 18-ஆம் தேதி வரை அவகாசம் உள்ளது. கழக பாக முகவர்கள் வீடு வீடாகச் சென்று இந்தப் பணியைச் செய்ய வேண்டும்.

பாசிசவாதிகள் தேர்தல் நெருங்குவதால் தொடர்ந்து தமிழ்நாட்டிற்கு வர ஆரம்பித்துள்ளனர். அமித் ஷா வந்திருக்கிறார், மோடியும் வருவார். அமித் ஷா அவர்கள் `அடுத்த இலக்கு தமிழ்நாடு' என்று சபதம் செய்துள்ளார். யார் வேண்டுமானாலும் இலக்கு வைக்கலாம், ஆனால் வெற்றி பெறப்போவது மக்களின் அன்பைப் பெற்ற திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணிதான். பாசிச பா.ஜ.க-வையும், அடிமை அ.தி.மு.க-வையும் மக்கள் நிராகரிப்பார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் அரசியல் லாபத்திற்காகத் தமிழ்நாட்டின் உரிமைகளை அடகு வைக்கிறார். "தி.மு.க-வை அழிப்பேன்" என்று கிளம்பியவர்கள் அழிந்து போயிருக்கிறார்களே தவிர, தி.மு.க-வைத் தொடக்கூட யாராலும் முடியாது. பழைய அடிமைகளும் புதிய அடிமைகளும் சேர்ந்து வந்தாலும் அவர்களை எதிர்கொள்ள நாம் தயார்.

தமிழகத்தில் ஒவ்வொரு வீட்டிலும் ஒருவர் நம் திட்டங்களால் பயன்பெற்றுள்ளனர். அவர்களுக்கு நம் சாதனைகளை நினைவூட்டுங்கள். வரும் தேர்தல் மிக முக்கியமானது. அடுத்த 90 நாட்களில் மனக்கசப்புகளை மறந்து, ராயபுரம், ஆர்.கே நகர், பெரம்பூர் உள்ளிட்ட அனைத்துத் தொகுதிகளிலும் மிகப்பெரிய வெற்றியை ஈட்ட உழைக்க வேண்டும். கழகத் தலைவர் அவர்கள் மீண்டும் முதலமைச்சர் நாற்காலியில் அமர, கழக உடன்பிறப்புகளாகிய நீங்கள் சுற்றிச்சுழன்று களப்பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வாய்ப்பளித்த அண்ணன் ஆர்.டி. சேகர் அவர்களுக்கும் உங்களுக்கும் நன்றி.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், ஜே.ஜே.எபினேசர், ஐட்ரீம்ஸ் மூர்த்தி, மற்றும் இளைய அருணா, மருதுகணேஷ், பாண்டிச் செல்வம், பழ. செல்வகுமார், மாவட்டக் கழக நிர்வாகிகள் வெற்றிவீரன், எஸ். ஆர். கமலக்கண்ணன், மு.கோபி, நாகம்மை கருப்பையா, தயாளன், பகுதிக் கழகச் செயலாளர்கள் ஜெயரா மன், முருகன், வ.பெ.சுரேஷ், ஜெபதாஸ் பாண்டியன், செந்தில்குமார், லட்சுமணன், பொதுக்குழு உறுப்பினர்கள் கமலக்கண்ணன், தமிழ்ச்செல்வன், மதிவாணன், அமுலு, சிவக்குமார், ராஜேந்திரன், சண்முகம், தஞ்சாவூர் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜி.கே.எம்.ராஜா, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கௌதம், சோமசுந்தர மூர்த்தி, சத்தியநாராயணன், மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி கணேசன், வட்டக் கழகச் செயலாளர்கள் முருகன், தினகரன் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் அவர்கள், திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு அரசின் வரலாற்று சிறப்பு மிக்க முன்னெடுப்பாக "உங்க கனவ சொல்லுங்க என்ற திட்டத்தினை தொடங்கி வைத்ததை தொடர்ந்து, அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி அனிதா அரங்கத்தில் அரியலூர் மாவட்டத்தில் உங்க கனவ சொல்லுங்க திட்டத்தின் பணிகளை மேற்கொள்ளவுள்ள தன்னார்வலர்களுக்கு அடையாள அட்டைகள், விண்ணப்ப படிவங்களை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி மற்றும் பலர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் காணொளிகாட்சி வாயிலாக "உங்க கனவை சொல்லுங்க திட்டத்தினை துவங்கி வைத்ததை தொடர்ந்து, நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலக முதன்மைக்கூட்டரங்கில் நடைபெற்ற விழாவில் தன்னார்வலர்களுக்கு அடையாள அட்டை, கணக்கெடுப்பு படிவங்களை நாகை மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக தலைவர் என்.கௌதமன், மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ். கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் நாகை மாலி ஆகியோர் வழங்கினார்கள். உடன், உடன் கழக மீனவர் அணி துணை செயலாளர் ஜி.மனோகரன் நகர செயலாளர் நாகை இரா. மாரிமுத்து, நாகூர் எம்.ஆர்.செந்தில்குமார் மற்றும் பலர் உள்ளனர்.

## தேசிய மக்கள்தொகைக் கணக்கெடுப்புடன் சாதிவாரிக் கணக்கெடுப்பையும் சேர்த்து நடத்தத் திட்டமிட்டுள்ள

# ஒன்றிய அரசின் முடிவினை வரவேற்கிறோம் - மாநில முதல்வர்கள் உள்ளடக்கிய ஆலோசனைக் குழுவை அமைத்திடுக!

## பிரதமர் நரேந்திர மோடிக்கு — முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, ஜன.12 -**

**தேசிய மக்கள்தொகைக் கணக்கெடுப்புடன் சாதிவாரிக் கணக்கெடுப்பையும் சேர்த்து நடத்தத் திட்டமிட்டுள்ள ஒன்றிய அரசின் முடிவினை வரவேற்றும், இதனைத் திறம்பட மேற்கொள்ள மாநில முதலமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு ஆலோசனைக் குழுவை அமைத்திட வேண்டுமென்று வலியுறுத்தியும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

முதல்வர் அவர்களின் கடித விவரம் வருமாறு:-

தேசிய மக்கள்தொகைக் கணக்கெடுப்புடன் சாதி அடிப்படையிலான கணக்கெடுப்பையும் சேர்த்து நடத்திட திட்டமிட்டுள்ள ஒன்றிய அரசின் முடிவினை வரவேற்றும், சாதிவாரியான கணக்கெடுப்பிற்கு மேற்கொள்ள வேண்டிய வழிகாட்டுதல்கள் குறித்து விரிவாக விவாதித்து மேம்படுத்திட மாநில முதலமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு ஆலோசனைக் குழுவையும் அமைக்க வேண்டுமென்று வலியுறுத்தியும், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு நேற்று முன்தினம் (10.01.2026) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், தேசிய மக்கள்தொகைக் கணக்கெடுப்புடன், சாதி அடிப்படையிலான கணக்கெடுப்பையும் சேர்த்து நடத்தத் திட்டமிட்டுள்ள ஒன்றிய அரசின் முடிவின் மூலமாக, விரிவான, நம்பகமான தரவுகளைப் பெற்று, சமூக ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்திடவும், நலத்திட்டங்கள் உரியவர்களுக்கு சென்று சேருவதை உறுதி செய்திடவும் இயலும் என்று தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், இது தமிழ்நாடு அரசின் நீண்டகால கோரிக்கையுடன் ஒத்துப்போவதால், ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கையை வரவேற்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மக்கள்தொகைக் கணக்கெடுப்புடன், சாதிவாரிக் கணக்கெடுப்பையும் சேர்த்து நடத்திட வேண்டுமென்று ஒன்றிய அரசை வலியுறுத்தும் தீர்மானங்களை ஏற்கெனவே தமிழ்நாடு சட்டமன்றம் நிறைவேற்றி, இந்தக் கோரிக்கையில் தமிழ்நாடு முன்னோடியாக உள்ளதாக முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். மேலும் ஒன்றிய அரசின் இந்த முடிவானது, ஆதாரங்களின் அடிப்படையிலான சமூகநீதிக்கான தமிழ்நாட்டின் நிலைப்பாட்டினை உறுதி செய்வதாகவும் உள்ளதாக முதலமைச்சர்அவர்கள் தனது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

இருப்பினும், சாதிவாரிக் கணக்கெடுப்பு என்பது ஆழமாக வேரூன்றிய சமூக இயக்கவியல், பல்வேறு மாநிலங்களில் சாதிய கட்டமைப்புகளிலுள்ள வேறுபாடுகள் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு மிகுந்த கவனத்துடன் கையாளப்படாவிட்டால், எதிர்பாராத சமூகப் பதட்டங்களுக்கான சாத்தியக்கூறுகளை ஏற்படுத்தக்கூடிய உணர்வுபூர்வமான விஷயமாக உள்ளதால், இக்கணக் கெடுப்பினை மேற்கொள்வதற்கான கேள்விகள், பிரிவுகள், துணைப்பிரிவுகள் மற்றும் தரவு சேகரிப்பு வழிமுறைகள் துல்லியமாக வும், தெளிவானதாகவும் இருக்கும்பட்சத்தில் மட்டுமே, பொது நம்பிக்கையை உறுதி செய்திட முடியுமென்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இல்லாவிடில், இந்த அம்சங்களில் ஏதேனும் குறைபாடுகள், சர்ச்சைகள், துல்லியமின்மை அல்லது பிளவுபட்ட கருத்துக்களை அதிகரிக்கக்கூடும் எனவும் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

**மாநில அளவிலான கொள்கைகளை ஆழமாகப் பாதிக்கும்!**

மக்கள் தொகை கணக்கெடுப்பு ஒன்றிய அரசின் பட்டியலில் இருந்தாலும், அதன் முடிவுகள் கல்வி, வேலைவாய்ப்பு, இடஒதுக்கீடு மற்றும் நலத்திட்டங்கள் குறித்த மாநில அளவிலான கொள்கைகளை ஆழமாகப் பாதிக்கும் என்பதால் இப்பணி தொடர்பான வினாப் படிவங்கள் மற்றும் வழிமுறைகள் ஆகியவற்றை முடிவு செய்வதற்கு முன்பாக ஒன்றிய அரசு அனைத்து மாநிலங்களுடன் கலந்தாலோசிப்பது அவசியமானதாகும் என்றும் முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார். இத்தகைய ஆலோசனை, இந்த முக்கியமான செயல்பாட்டில், யூனியன் பிரதேசங்கள் மற்றும் மாநிலங்களின் பல்வேறு கண்ணோட்டங்களை இணைக்கவும், குறிப்பிட்ட நுணுக்கங்களைக் கணக்கிடவும், கூட்டாட்சியை வளர்க்கவும் உகந்ததாக இருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே, 1. சாதிவாரிக் கணக்கெடுப்புக்கான வழிகாட்டுதல்கள் குறித்து விவாதித்து மேம்படுத்திட மாநில முதலமைச்சர்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு ஆலோசனைக் குழுவை உருவாக்கவும்;

2. இப்பணி தொடர்பான செயல்முறையின் உணர்திறனைப் பாதுகாக்கவும், சமூக நீதியை மேம்படுத்துவதற்கான தரவுகளின் நம்பகத்தன்மையை உறுதி செய்யவும், தேவைப்படும் இடங்களில் முன்னோடி சோதனை ( pilot study) உட்பட, கட்டமைப்பை வடிவமைப்பதில் மிகுந்த கவனமுடன் செயல்பட வேண்டுமென்றும் முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தியப் பிரதமர் அவர்களின் தலைமையின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நடவடிக்கை, சமத்துவம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய இந்தியாவின் உறுதிப்பாட்டை வலுப்படுத்தவும், கூட்டாட்சிக் கொள்கைகளை நிலைநிறுத்த வும் பயன்படுத்தப்படும் என்று தான் நம்புவதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள் ளார்.

---

## தமிழ்நாட்டில் குறு, சிறு, நடுத்தர தொழில்கள் மூடப்படும் சூழல் — 30 லட்சம் தொழிலாளர்கள் வேலை இழக்கும் அபாயம்!

# தமிழ்நாட்டின் திட்டங்களை நிறைவேற்ற ஒன்றிய அரசு உரிய நிதியை உடனே வழங்க வேண்டும்!

## நிதிநிலை அறிக்கைக்கான முன்னோடி ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் தங்கம் தென்னரசு பேச்சு!

**புதுடெல்லி, ஜன.12 -**

**புதுதில்லியில் ஒன்றிய நிதி அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தலைமையில் மாநில நிதி அமைச்சர்களுடனான ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கைக்கான முன்னோடி ஆலோசனை கூட்டத்தில் தமிழ்நாடு அரசின் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

இக்கூட்டத்தை ஏற்பாடு செய்ததற்காகவும், எதிர்வரும் ஒன்றிய நிதிநிலை அறிக்கை தயாரிப்பதற்கு மாநிலங்களின் ஆலோசனைகளைக் கோரியுள்ளதற்காகவும், ஒன்றிய நிதியமைச்சர் அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இக்கூட்டம், நிதிக் கூட்டாட்சித் தத்துவத்தின் ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாக விளங்குவதுடன், இந்த நிதிநிலை அறிக்கையில் மாநிலங்களின் கருத்துக்கள் உரிய முறையில் பரிசீலிக்கப்படும் என்றும் நான் நம்புகிறேன்.




**ஒன்றிய அரசின் பலன்கள் மாநில அரசுகளுக்கு கிடைப்பதில்லை!**

நீண்டகாலமாக நிலுவையில் இருந்த சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்கான ஒப்புதலை ஒன்றிய அரசு 2024 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அளித்தது. எனினும், ஒப்புதல் அளிக்கப்பட்ட நாளிலிருந்து ஒன்றரை ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும், ஒன்றிய அரசு அளித்த ஒப்புதலின் பலன்கள் முழுமையாக மாநில அரசிற்கு கிடைக்கப் பெறவில்லை. ஒன்றிய அரசின் ஒப்புதல் மற்றும் ஒன்றிய அரசு தனது பங்குத் தொகையான 9,500 கோடி ரூபாயை விடுவிப்பதை எதிர்நோக்கி, தமிழ்நாடு அரசு இத்திட்டத்திற்கு முன்னதாகவே இத்தொகையை விடுவித்துள்ளது. இத்தொகையானது, மாநில அரசின் கடன்கள் மற்றும் நிலுவைக் கடன்களின் ஒரு பகுதியாக இடம் பெற்று வருகிறது.

இந்தக் கணக்கியல் வேறுபாடு காரணமாக, மாநில அரசின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் கடன் விகிதம் எதிர்மறையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், மாநில அரசிற்கு அனுமதிக்கப்படும் கடன் வரம்பும் குறைகிறது. ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் கணக்குகளில் இத்தொகை உரிய வகையில் இடம்பெறும் வகையில், அமைச்சரவையின் ஒப்புதலுக்கு ஏற்ப ஒன்றிய அரசின் வரவுசெலவுத் திட்டத்தில் தேவையான நிதி ஒதுக்கீடு மற்றும் கணக்கியல் பதிவுகளை ஒன்றிய அரசு செய்திட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

**மதுரை - கோவை மெட்ரோ ரெயில் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கவும்!**

மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகரங்களில் மெட்ரோ இரயில் திட்டத்தை செயல்படுத்துவதற்கு ஒன்றிய அரசின் ஒப்புதலுக்காக தமிழ்நாடு அரசு சமர்ப்பித்த விரிவான திட்ட அறிக்கைகளுக்கு ஒப்புதல் வழங்காததற்கு தெரிவிக்கப்பட்டுள்ள காரணங்கள், ஏற்கெனவே மற்ற மாநிலங்களில் ஒப்புதல்கள் வழங்கப்பட்ட இதர நகரங்களுடன் ஒப்பிடும் போது முரண்பாடாக அமைந்துள்ளது. மதுரை மற்றும் கோயம்புத்தூர் மெட்ரோ இரயில் திட்டங்களுக்கான விரிவான திட்ட அறிக்கைகளை ஒன்றிய அரசு மறு பரிசீலனை செய்து ஒப்புதல் அளித்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

தனது வரி விகிதங்களை அமெரிக்கா உயர்த்தி வருவதால், தமிழ்நாட்டின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தமிழ்நாட்டின் மொத்த ஏற்றுமதி வர்த்தகத்தில் 31 சதவீதம் அமெரிக்க நாட்டுடன் நடைபெறுவதால், இந்த உயர் வரி விகிதங்கள், மற்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டை மிகவும் கடுமையாக பாதித்துள்ளதுடன், உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பில் குறிப்பிடத்தக்க அளவில் தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. முக்கியமான துறைகளில், ஜவுளித் துறை இதனால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் ஜவுளி ஏற்றுமதியில் தமிழ்நாடு 28 சதவீதம் பங்களித்து வருகிறது என்பதாலும், 75 இலட்சத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கி வருவதாலும், இதனை தேசிய அளவிலான சவாலாகவே கருத வேண்டும். இதே நிலைமை தொடர்ந்தால், 30 இலட்சம் தொழிலாளர்கள் உடனடியாக வேலை இழப்பைச் சந்திக்கும் அபாயத்தில் உள்ளனர் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், பல குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மூடப்படும் அபாயத்தையும் தமிழ்நாடு எதிர்நோக்கியுள்ளது. தொழிலாளர்களின் வேலைவாய்ப்பைப் பாதுகாக்கவும், சமச்சீரான ஏற்றுமதி வாய்ப்புகளை உறுதி செய்திடவும், வட்டி மானியம் உள்ளிட்ட மானியங்கள், ஏற்றுமதி ஊக்கத்தொகை மற்றும் பொருத்தமான வரிச் சலுகை போன்ற அம்சங்கள் அடங்கிய ஜவுளித் துறைக்கான பிரத்தியேக ஆதரவுத் தொகுப்பை அறிவித்திட ஒன்றிய அரசு பரிசீலித்திட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

**ரூ.10,000 கோடி வருவாய் இழப்பு ஏற்படும்!**

சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு முறையின் கீழ் வருவாய் இழப்பு என்பது இங்கு உள்ள அனைத்து மாநிலங்களும் பகிர்ந்து கொண்ட ஒரு முக்கியமான கவலையளிக்கும் பொருளாகும். சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டபோது, கூட்டாட்சி உணர்வுடன், மாநிலங்கள் தங்களது வருவாய் பாதுகாக்கப்படும் என்ற உத்தரவாதத்தின் அடிப்படையில் தங்கள் தன்னாட்சியை விட்டுக் கொடுக்க ஒப்புக்கொண்டன. சரக்கு மற்றும் சேவை வரி இழப்பீட்டு நடைமுறை முடிவுக்கு வந்த பின்னர், மாநிலங்கள் நிதி நெருக்கடியை சமாளித்து வந்த நிலையில், அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரி விகிதங்களில் சீரமைப்பு மாநில அரசுகளின் வருவாயை மேலும் பாதித்துள்ளது. இவ்வரி விகித சீரமைப்பினால், நடப்பு நிதியாண்டில் தமிழ்நாட்டிற்கு மட்டும் 10,000 கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மாநில அரசுகள் எதிர்கொள்ளும் வருவாய் இழப்பினைக் குறைத்திடும் வகையில், இழப்பீட்டு முறை ஒன்றை அறிமுகப்படுத்திட வேண்டும் என ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், எதிர்பார்க்கப்படும் வருவாய் இழப்புகளை ஈடுகட்டுவதற்கு, தீங்கு விளைவிக்கும் பொருட்களுக்கான சரக்கு மற்றும் சேவை வரிகள் மீதான மேல் வரி விதிப்பதற்கு தமிழ்நாடு அரசு ஏற்கெனவே தனது ஆட்சேபணையை எழுப்பியுள்ளது என்பதை தங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். தமிழ்நாடு அரசின் ஆட்சேபணை கருத்தில் கொள்ளப்படாத நிலையில், தீங்கு விளைவிக்கும் பொருட்கள் மீதான ஒன்றிய அரசின் ஆயத்தீர்வைகள் உயர்த்தப்படும் போது, அவற்றின் மீதான சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் தேசியப் பாதுகாப்பு மேல்வரிகள் மூலமாகப் பெறப்படும் வருவாய் உயர்வதால், நுகர்வோர் மீதான வரிச்சுமையில் மாற்றம் ஏதும் ஏற்படாதபோதும், அதன் மூலம் பெறப்படும் கூடுதல் வருவாய் ஒன்றிய அரசிற்கே முழுமையாகச் சென்றடைகிறது. நாட்டின் வருவாயில் மாநிலங்கள் தங்களுக்கு உரிய பங்கைப் பெறுவதை உறுதி செய்யும் வகையில், இது போன்ற அனைத்து மேல்வரிகள் மற்றும் கூடுதல் கட்டணங்களை அடிப்படை வரிவிகிதங்களுடன் இணைத்திட வேண்டும் என ஒன்றிய அரசை கேட்டுக் கொள்கிறேன்.

ஒருபுறம், சரக்கு மற்றும் சேவை வரி முறையின் கீழ் மாநிலங்கள் தொடர்ந்து வருவாய் இழப்பைச் சந்தித்து வரும் நிலையில், மேல்வரி மற்றும் கூடுதல் கட்டண முறையை தொடர்ந்து விதித்து வருவதன் மூலம் ஒன்றிய அரசின் வரிகளில் மாநிலங்களின் பங்கு குறைந்து வருகிறது. மறுபுறம், ஒன்றிய அரசின் நிதியுதவி பெறும் திட்டங்களுக்கான நிதிச் சுமையை மாநில அரசுகள் மீது ஒன்றிய அரசு தொடர்ந்து உயர்த்தி வருகிறது.

வளர்ந்த பாரதம் வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கம் (ஊரகம்) சட்டம் (Viksit Bharat - Guarantee for Rozgar and Ajeevika Mission (Grameen) Act) அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம், இருபது ஆண்டுகளுக்கும் மேலாக நாடு முழுவதும் செயல்படுத்தப் பட்டு, உலகளவில் பாராட்டப்பட்ட ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் தற்போது செயலிழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இத்தகைய பிற்போக்குத்தனமான நடவடிக்கை, கிராமப்புறப் பொருளாதாரம் மற்றும் வேளாண் தொழிலாளர்களுக்கான ஊதிய விகிதங்களில் எதிர்மறையான பாதிப்பை ஏற்படுத்தும். மேலும், புதிய பங்கீட்டு முறை காரணமாக மாநிலங்களின் மீதான நிதிச்சுமை பன்மடங்கு அதிகரிக்கும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, 2023-24-ஆம் ஆண்டு அளவிலேயே இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்ந்தாலும், மாநில அரசு ஏறத்தாழ 5,000 கோடி ரூபாய் கூடுதல் நிதிச்சுமையை ஏற்க வேண்டியிருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. வறுமையை நிர்ணயிப்பதற்கான அளவீடுகள் அடிப்படையில் நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படுமானால், இந்தக் கூடுதல் நிதிச்சுமையானது மேலும் அதிகரிக்கும். எனவே, இந்தத் திட்டத்தின் செலவுப் பங்கீட்டு விகிதத்தினையும், மாநில அரசுகளுக்கான நிதி ஒதுக்கீடுகளையும் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என ஒன்றிய அரசினை கேட்டுக்கொள்கிறேன்.

**ரூ.2,283 கோடியை ஒன்றிய அரசு வழங்க மறுப்பதால் நிதி நெருக்கடி!**

ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ், ஒன்றிய அரசின் பங்குத் தொகையான 9,025.68 கோடி ரூபாய் உட்பட, 18,123.05 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகளை தமிழ்நாட்டில் மேற்கொள்ள ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. எனினும், செப்டம்பர் 2024 முதல் இந்தத் திட்டத்தின் கீழ் நிதி ஏதும் விடுவிக்கப்படவில்லை. நிலுவையில் உள்ள ஒன்றிய அரசின் பங்கான 3,112 கோடி ரூபாயை உடனடியாக விடுவித்து, இந்த முக்கியமான பணிகளை உரிய காலத்தில் நிறைவேற்றுவதை ஒன்றிய அரசு உறுதி செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் நிலவி வரும் கடுமையான புளோரோசிஸ் பிரச்சினைக்குத் தீர்வு காண வடிவமைக்கப்பட்ட முக்கியமானதொரு திட்டமான, ஒகேனக்கல் குடிநீர் விநியோகத் திட்டத்தின் மூன்றாம் கட்டப் பணிகள் குறித்து தங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன். 8,428 கோடி ரூபாய் மதிப்பிலான இத்திட்டமானது, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் நிதியுதவி உள்ளிட்ட, பல்வேறு தரப்புகளிலிருந்து நிதி ஆதாரங்களை எதிர்பார்த்துள்ள நிலையில், ஒன்றிய அரசானது தனது பங்கான 2,283 கோடி ரூபாயை வழங்க மறுத்ததன் காரணமாக, நிதி நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள மிகவும் முக்கியமான இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. குடிநீர்ப் பற்றாக்குறை நிலவி வரும் குடியிருப்புகளுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்கு, இந்தத் திட்டத்தின் விரிவாக்கம் தொடர்பான நடைமுறை தாமதங்கள் தடையாக இருக்கக்கூடாது என்பதால், இத்திட்டத்திற்கு ஒன்றிய அரசு ஒப்புதல் அளிக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

2024-25 மற்றும் 2025-26-ஆம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின் (Samagra Shiksha) கீழ் ஒன்றிய அரசு ஒப்புதல் அளித்த தனது பங்குத்தொகையான 3,548 கோடி ரூபாயை இன்றுவரையில் விடுவிக்கவில்லை என்பதை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளின் செயல்பாட்டிற்கு இந்த நிதி இன்றியமையாதது என்பதுடன், இந்நிதியை விடுவிப்பதில் ஏற்படும் தாமதம் 44 இலட்சம் மாணவர்களின் கல்வியையும், 2.4 இலட்சம் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களின் வாழ்வாதாரத்தையும் நேரடியாகப் பாதிக்கிறது. ஒன்றிய அரசு தனது பங்கை விடுவிக்காததால், மாநில அரசு முழு செலவையும் ஏற்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது. வேறு எந்தவொரு நிபந்தனையையும் விதிக்காமல் இந்நிதியை விடுவிக்க வேண்டுமென ஒன்றிய அரசை கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றிய அரசின் உதவி பெறும் திட்டங்களின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள செலவின விகிதங்கள் விலைவாசிக்கு ஏற்ப நீண்டகாலமாக திருத்தப்படாமல் இருப்பதால், மாநில அரசுகள் மீதான நிதிச்சுமை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதன் விளைவாக, திட்டத்தின் மொத்தச் செலவினத்தில் மாநில அரசுகள் உயர் விகிதத்தில் தனது பங்காக ஏற்கும் கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. உதாரணமாக, பிரதம மந்திரியின் வீட்டுவசதித் (ஊரகம் மற்றும் நகர்ப்புறம்) திட்டத்தின் கீழ், ஒன்றிய அரசின் பங்களிப்பு, வீடு கட்டுவதற்கான மொத்தச் செலவில் முறையே 30 சதவீதம் மற்றும் 10 சதவீதம் மட்டுமே உள்ளது. பெரும்பான்மையான நிதிச்சுமை மாநில அரசுகளின் மீதே விழுகிறது. எனவே, வரவிருக்கும் வரவுசெலவுத் திட்டத்தில், ஒன்றிய அரசின் நிதியுதவி பெறும் திட்டங்களின் கீழ், ஓர் அலகிற்கான செலவின விகிதங்களை மாற்றியமைத்து, மொத்தச் செலவினத்தில் குறைந்தபட்சம் 75 சதவீதம் பங்களிப்பை வழங்குவது குறித்து ஒன்றிய அரசு பரிசீலிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

மாநிலத்தின் தொழில் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்காக தொழிற்பகுதிகளில் புதிய இரயில் தடங்கள் அமைப்பதற்கான தேவை உள்ளது. எதிர்வரும் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டிற்கு பின்வரும் இரயில் திட்டங்களுக்கு அனுமதி வழங்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

திருப்பத்தூர் - கிருஷ்ணகிரி - ஓசூர் புதிய இருப்புப்பாதை வழித்தடம்

மதுரை - தூத்துக்குடி - வழி - அருப்புக்கோட்டை இருப்புப்பாதை வழித்தடம் (143.5 கி.மீ)

மீஞ்சூர் - திருவள்ளூர் - ஸ்ரீபெரும்புதூர் - ஒரகடம் - சிங்கப்பெருமாள்கோயில் - மதுராந்தகம் இருப்புப்பாதை வழித்தடம்.

சேலம் - ஓசூர் - பெங்களூரு மற்றும் கோயம்புத்தூர் - எர்ணாகுளம் நீட்டிப்புகளுடன் கூடிய சென்னை - சேலம் - கோயம்புத்தூர் ஆகிய இடங்களை இணைக்கும் மிதவேக இருப்புப்பாதை வழித்தடம்.

தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களை அதிகரிக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். அத்தகைய திட்டங்களில் ஒன்றாக, தாம்பரம் மற்றும் செங்கல்பட்டுக்கு இடையேயான உயர்மட்டச் சாலை (NH32) மற்றும் செங்கல்பட்டிலிருந்து திண்டிவனம் வரையிலான சாலை அமைப்பதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். 2005ஆம் ஆண்டில் சென்னை கன்னியாகுமரி வழித்தடத் திட்டம், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் (NHAI) நான்குவழி நெடுஞ்சாலையாக மேம்படுத்தப்பட்டது. தற்போது, போக்குவரத்து வாகனங்கள் பன்மடங்கு அதிகரித்து, சாலை விபத்துகளால் கடுமையான பாதிப்புகளும் உயிரிழப்புகளும் ஏற்பட காரணமாக உள்ளது. இந்தத் திட்டங்களுக்கு, வரும் நிதிநிலை அறிக்கையில் போதுமான நிதியை ஒதுக்க வேண்டும் என்று ஒன்றிய அரசை கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வாய்ப்பை வழங்கியதற்காக மீண்டும் ஒருமுறை நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இக்கூட்டத்தில் தெரிவிக்கப்படும் மாநிலங்களின் கருத்துகள் நேர்மறையாக பரிசீலிக்கப்படும் என்று நம்புகிறேன்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு பேசினார்.



புதுக்கோட்டை கலைஞர் கருணாநிதி கலை கல்லூரி வளாகத்தில் புதுக்கோட்டை வடக்கு மற்றும் தெற்கு மாவட்ட மாணவரணி சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் ஆ.கலைச்செல்வன், கே.எஸ்.ச.இளையச்சூரியன் ஆகியோர் தலைமையில், அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் ஆகியோர் மாணவர்களுக்கு இனிப்புகள் வழங்கினார்கள். நிகழ்வில் டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, மேயர் திலகவதி செந்தில், துணை மேயர் எம்.லியாகத் அலி, வி.ஜி.ஆர்.மணிவண்ணன், சொ.தமிழினியன், தெய்வானை, ராயல் சபா. ராஜ. பெரியண்ணன், ஆர்.எம்.கே.கார்த்திக், உதயசூர்யா, பிரசன்னா, கோ.அண்ணாத்துரை, பிரசன்னா, சிப்காட் சதீஷ், ஜெயகிருஷ்ணன் ராஜ், ராஜமாணிக்கம், அஜ்மீர், ராஜா உள்ளிட்ட துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள், கல்லூரி மாணவ, மாணவிகள் பங்கேற்றனர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, கரூர் மாவட்டக் கழகம் சார்பில் மாவட்ட அளவிலான, பள்ளி மற்றும் கல்லூரி மாணவியர்களுக்கான, பரிசுத்தொகை ரூ. 1,92,800 மற்றும் கோப்பைகளுக்கான கபாடி, கோகோ, கைப்பந்து, எறிபந்து மற்றும் கூடைப்பந்து விளையாட்டு போட்டிகள், கரூர் திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகிறது. கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். மொத்தம் 153 அணிகள், 1047 மாணவியர்கள் கலந்து கொண்டனர்.